# Chapter 01

Act: 01: பெயர்:- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ்

Act: 02: முகவரி:- P.O.Box.02 Belihuloya Sri Lanka

Act: 03: Vision

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் பலகலைகழக மாணவர்கள் மத்தியில் சிறந்த உறவையும் பண்பாட்டு விழுமியங்களையும் நிலை நிறுத்த அர்பணிப்புடன் செயற்படல்.

Act: 04: Mission

பல்லின சமுதாயத்திற்கு மத்தியில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் முஸ்லிம்கள் மத்தியிலும் முஸ்லிம் அல்லாதவர் மத்தியிலும் சகோதரத்துவம் சகவாழ்வு என்பவற்றை பேணல்.

# Chapter 02

Act: 05: முஸ்லிம் மஜ்லிஸினுடைய நோக்கங்களை தெளிவு படுத்தி நிற்கின்றது. (Objectives).

A. முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் கூட்டுறவு நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுதல்.
B. முஸ்லிம் மாணவர்களின் கல்வி, கலாசார, ஒழுக்கவிழுமியங்களை பேணிப்பாதுகப்பாதுடன் அவர்களது திறமைகளை இனங்கண்டு அதற்குரிய வாய்ப்பு வசதிகளை செய்து கொடுத்தல்.
C. நாட்டின் மற்றும் பல்கலைக்கழகத்தின் சட்டங்களின் அனுகூலங்கள் சலுகைகள் என்பவற்றை பயன்படுத்தல்.
D. கஷ்டப் பிரதேச பாடசாலைகளின் கல்வி தரத்தை மேம்படுத்த சிறந்த திட்டங்களை இனங்கண்டு அதற்கு ஏற்றவாறு செயற்படல்.
E. அந்நியச் சமூகத்துடன் நட்புறவுடனும் இன முரண்பாட்டை களைவதற்குமான வழிகளை செய்தல்.
F. வறுமை மற்றும் இன்னோரன்ன காரணங்களால் பட்டப்படிப்பை தொடர கஷ்டப்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு கல்வியை தொடர்வதற்கான சிறந்த வழிவகைகளை செய்தல்.
G. சமூக நலன்களை கருத்திற்கொண்டு சமூக மேம்பாட்டு திட்டங்களை எவ்வாறு வெற்றிகொள்வதென மாணவர்களுக்கு பயிற்சியளித்தல்.
H. மரணம் மற்றும் திடீர் விபத்துகளில் பாதிக்கப்படும் பட்டதாரி மாணவர் உட்பட்ட அவரின் குடும்பத்திற்கு இயன்றளவு உதவிகளை செய்தல்.

I. அயல் கிராமங்கள், பள்ளிவாயல்கள் மற்றும் பாடசாலைகளில் அவ்வப்போது கண்டறியப்படும் தேவைகளை இயன்றளவு நிறைவேற்றல்.
J. முஸ்லிம் மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்குரிய தீர்வுகளை பெற்றுத்தர உதவுதல்.
K. கலாச்சார சீர்கேடுகளில் இருந்து முஸ்லிம் மாணவர்களை பாதுகாக்கும் நோக்கில் மார்க்க சொற்பொழிவுகள், சன்மார்க்க விளக்க உபதேசங்கள் என்பனவற்றை அவ்வப்போது ஏற்பாடு செய்தல்.
L. கால சூழ்நிலைக்கு ஏற்றவாறு பல கைங்கரியங்களை திட்டமிட்டு செயற்படுத்தல்.

## Chapter 03

### Act: 06: அங்கத்துவம் (அடிப்படை தகைமைகள்)

A. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக முஸ்லிம் மாணவராக இருத்தல் வேண்டும்.
B. முஸ்லிம் மஜ்லிஸினுடைய சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

### Act: 07: அங்கத்துவத்தை இழத்தல்

A. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் என்ற தகைமை இழக்கப்படும் போது.
B. முஸ்லிம் மஜ்லிஸினுடைய சட்ட திட்டங்களை மீறிச் செயற்படும் போது.

### Act: 08: நிருவாக சபை

A. 16 உறுப்பினர்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும்.
B. நிருவாக சபை ஒரு வருட கல்வியாண்டை கொண்டதாக இருத்தல் வேண்டும்.
C. நிருவாக சபை ஒருமாத கால இடைவெளியில் குறைந்தபட்சம் ஒரு முறையாவது கூட்டப்படல் வேண்டும்.

### Act: 09: நிருவாக சபை மாற்றமும் தெரிவும்

A. முஸ்லிம் மஜ்லிஸ் மாணவர்களின் பெரும்பான்மையானோர் (51%) அங்கீகாரமிட்டு ஒரு பிரேரணை சமர்பிக்கப்படும் போது விசேட பொதுக்கூட்டம் கூட்டப்படல் வேண்டும்.
B. அப்பிரேரணை 2/3 பெரும்பான்மை அங்கீகாரம் பெறப்படும் பட்சத்தில் புதிய நிருவாக சபை தெரிவு இடம்பெறும்.
C. ஒரு வருட கல்வியாண்டின் பின் தானாகவே கலைக்கப்பட்டதாக கருதப்படும்.
D. சகல பீடங்களை சேர்ந்த மாணவர்களுக்கும் கட்டாய உறுப்புரிமை வழங்கப்படல் வேண்டும்.

E. பெண்களுக்கு என பிரத்தியோகமான அமைப்பு காணப்படும்.
F. நிருவாக சபை தெரிவில் சகல பீட மாணவர்களதும் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.
G. சிரேஸ்ட பொருளாலர் மற்றும் ஆலோசகர் பல்கலைக்கழகத்தின் கல்விசார் அல்லது நிருவாக உத்தியோகத்தர் ஒருவராக காணப்படுவார்.
H. தெரிவுகள் அனைத்தும் பிரேரணை ஆமொதிப்பதன் மூலம் இடம்பெறும் ஒன்றுக்கு மேற்பட்ட பிரேரணைகள் காணப்படும் பட்சத்தில் வாக்கெடுப்பு மூலம் தெரிவுகள் இடம்பெறும்.
I. வாக்கெடுப்பு, இயலவே உள்ள நிருவாக சபையால் நடாத்தப்படும்.

## Act: 10: நிருவாக உறுப்பினர்கள்

A. உபகாரி
B. சிரேஷ்ட பொருளாலர்
C. தலைவர்
D. பொதுச்செயலாளர்
E. உபதலைவர்
F. உபசெயலாளர்
G. கனிஷ்ட பொருளாலர்
H. பழைய மாணவர் ஒருங்கிணைப்பாளர்
I. ஊடகம் மற்றும் வெளியீடு
J. பாடசாலைகள் அபிவிருத்தி
K. முதலாம் வருட உறுப்பினர் (ஆண்)
L. பெண் உறுப்பினர்கள் (07)

(Note (Ladies): 3ம் வருடம் – 02, 2ம் வருடம் – 03, 1ம் வருடம் - 02)

## Act: 11: சிரேஷ்ட பொருளாலர்

A. முஸ்லிம் மஜ்லிஸினுடைய கல்விசார் அல்லது நிருவாக உத்தியோகத்தர்
B. கனிஷ்ட பொருளாலரால் தயாரிக்கப்பட்ட வரவு செலவு அறிக்கைகளை பரிசீலனை செய்து கையொப்பம் இடல்.
C. முஸ்லிம் மஜ்லிஸினுடைய சட்டதிட்டங்களை மீறும் ஒருவரை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் பெற்றவர்.
D. முஸ்லிம் மஜ்லிஸ் உறுப்பினர்கள் சம்மந்தமாக கேள்வி கேற்கும் அதிகாரம் பெற்றவர்.

Act: 12: தலைவர்

A. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக முஸ்லிம் மாணவராக இருத்தல் வேண்டும். எந்த பீடத்திலிருந்தும் தெரிவு செய்யப்படலாம். மற்றும் 3ம் வருட மாணவராக இருத்தல், இஸ்லாமிய அறிவு பெற்றவராக இருத்தல் சிறந்தது, மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்றவராக இருத்தல் சிறந்தது.
B. எந்த விதத்திலும் முஸ்லிம் மஜ்லிஸினுடைய சட்டதிட்டங்களை மீராதவராக இருப்பதுடன் ஏதும் விசாரணைக்கு உட்படாதவராகவும் இருத்தல்.
C. சகல பொதுக்கூட்டங்களிலும் நிருவாகக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல்.
D. பொதுச்செயலாளரின் ஆலோசனைகளை பெறல்.
E. வரவு செலவு திட்டங்களை பரிசீலனை செய்தல்.
F. தவறுகளை சுட்டிக்காட்டவும் கேள்வி கேட்கவும் அதிகாரம் பெற்றவர்
G. குற்றப்பிரேரணை ஒன்றின் மூலம் பதவி நீக்கம் செய்யப்படுவார். அப்பிரேரணை பெரும்பான்மை உறுப்பினர் அங்கீகாரமிட்டு பொதுச்செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
H. பின் பொதுக்கூட்டத்தில் 2/3 பெரும்பான்மையுடன் பதவி நீக்கம் செய்யப்படுவார்.

Act: 13: பொதுச்செயலாளர்

A. முஸ்லிம் மஜ்லிஸினுடைய 3ம் வருட மாணவர்களில் ஒருவர் தெரிவு செய்யப்படுவார்
B. தலைவரின் ஆலோசனைக்கு இணங்க சகல கூட்டங்களையும் ஒழுங்கு செய்தல்.
C. சகல ஆவணங்களையும் ஒழுங்கு செய்து நிருவாக சபை மற்றும் பொதுச்சபைக்கு முன் சமர்பித்தல்.
D. முஸ்லிம் மஜ்லிஸினுடைய சொத்துக்களை பாதுகாத்தல்.
E. தலைவருக்கு ஆலோசனை வழங்கல்
F. சகல ஆவணங்களுக்கும் ஒப்பமிடல்.
G. 2/3 பெரும்பான்மையுடன் பதவி நீக்கப்படுவார்

Act: 14: உப தலைவர்

A. முஸ்லிம் மஜ்லிஸினுடைய இரண்டாம் வருட மாணவராக இருத்தல்.
B. தலைவர் இல்லாத பட்சத்தில் இடைக்கால தலைவராக செயற்படுதல்
C. தலைவருக்கு அறிக்கை சமர்பித்தல்
D. தலைவருக்கு உதவியாக செயற்படல்.
E. வெள்ளிக்கிழமைகளில் ஜும்மா பிரசங்கதிற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

Act: 15: உபசெயலாளர்

A. முஸ்லிம் மஜ்லிஸினுடைய இரண்டாம் வருட மாணவராக இருத்தல்.
B. செயலாளர் இல்லாத பட்சத்தில் இடைக்கால செயலாளராக செயற்படுவார்
C. செயலாளருக்கு அறிக்கை சமர்பித்தல்
D. செயலாளருக்கு உதவியாக செயற்படுதல்.
E. மார்க்க விளக்க வகுப்புகளை ஏற்பாடு செய்தல்.

Act: 16: கனிஷ்ட பொருலாளர்

A. முஸ்லிம் மஜ்லிசினுடைய 3ம் வருட மாணவராக இருத்தல்.
B. சகல நிதி விடயங்களுக்கும் பொறுப்பாக இருப்பதுடன் சகல நிதிகளையும் ஒன்று திரட்டல் செலவு செய்தல்.
C. முஸ்லிம் மஜ்லிஸினுடைய சொத்துக்களுக்கு பொறுப்பாய் இருந்து பாதுகாத்தல் (செயலாளர் ஆலோசனைகளை பெறல்).
D. சகல வரவு செலவு திட்டங்களையும் தயார் செய்து நிருவாக சபையிடம் ஒப்படைப்பதுடன் பொதுக்கூட்டத்திலும் அறிக்கை சமர்பித்தல்.
E. சிரேஷ்ட பொருளாலரின் ஆலோசனைகளை பெறுவதுடன் முக்கிய ஆவணங்களில் அவரின் அங்கிகாரத்தையும் பெறல் வேண்டும்.
F. 2/3 பெரும்பான்மையுடன் பதவிநீக்கம் செய்யப்படுவார்.

Act: 17: பழைய மாணவர் ஒருங்கிணைப்பாளர்

A. முஸ்லிம் மஜ்லிஸினுடைய 3ம் வருட மாணவராக இருத்தல்.
B. பழைய மாணவர்களின் விபரங்களை திரட்டல்.
C. பழைய மாணவர் ஒன்றுகூடலை நடாத்த தேவையான ஏற்பாடுகளை செய்தல்.
D. நிர்வாக சபைக்கு ஒத்துழைப்பு ஆலோசனை வழங்கள்.
E. அறிக்கை சமர்பித்தல்

Act: 18: ஊடகம் மற்றும் வெளியீடு

A. முஸ்லிம் மஜ்லிஸினுடைய 3ம் வருட மாணவராக இருத்தல்.
B. ஊடகத்துறைக்கு பொறுப்பாக இருத்தல்.
C. Internet, Email, Twitter போன்றவற்றை வழிநடத்தி செயற்படல்.
D. சகல வெளியீடுகளுக்கும் பொறுப்பாய் இருத்தல்.
E. நிருவாக சபைக்கு ஒத்துழைப்பு ஆலோசனை வழங்கள்.
F. அறிக்கை சமர்பித்தல்.

Act: 19: பாடசாலை அபிவிருத்தி

A. முஸ்லிம் மஜ்லிஸினுடைய இரண்டாம் வருட மாணவராக இருத்தல்.
B. பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தேவையான சகல விடயங்களுக்கும் பொறுப்பாக இருத்தல்.
C. நிருவாக சபைக்கு ஒத்துழைப்பு ஆலோசனை வழங்கள்.
D. அறிக்கை சமர்பித்தல்.

Act: 20: 1ம் வருட உறுப்பினர்

A. முஸ்லிம் மஜலிஸினுடைய முதலாம் வருட மாணவராக இருத்தல்.
B. 1ம் வருட மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு நிருவாக சபைக்கு எடுத்துரைத்தல்.

Act: 21: பெண் உறுப்பினர்கள்

A. 7ற்கு குறையாத உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும்.
B. முன்றாம் வருட மாணவிகளால் இவ்வுருப்பினர்களுக்கு தலைமை தாங்கி வழிநடத்தப்படல் வேண்டும்.
C. பெண்களுக்கான பிரத்தியோகமான கூட்டங்களை ஏற்பாடு செய்தல் தலைவர் செயலாளர் ஆலோசனைகளை பெறல்.
D. முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுக்கான முயற்சித்தல் அல்லது நிருவாக சபைக்கு எடுத்துரைத்தல்
E. நூலக மேற்பார்வை செய்வதுடன் நூலக சொத்துகளை பராமரிக்கும் வழிவகைகளை மேற்கொள்ளல்.
F. பெண்கள் ஒழுக்க விடயத்தில் அக்கரையுடனும் முன்மாதிரியுடனும் நடந்து இஸ்லாமிய ஒழுக்கத்தை மேம்படுத்த பாடுபடுவதுடன் பெண்கள் விசேட நிகழ்சிகளை ஏற்பாடு செய்தல்.

Act: 22: இணைப்பு உறுப்பினர்

A. கடந்த முஸ்லிம் மஜ்லிஸினுடைய தலைவர் இதன் இணைப்பு உறுப்பினராக கொள்ளப்படுவார்.
B. நிருவாக சபைக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம் பெற்றவர்.
C. பிரச்சினைகளை இனங்கண்டு சுட்டிக்காட்டவும் கேள்வி கேட்கவும் அதிகாரம் பெற்றவர்.

Act: 23: நிருவாக உறுப்பினர்களுக்கு எதிரான குற்றப்பிரேரணையும் பதவி விலகலும்

A. நிருவாக உறுப்பினர்களுக்கு எதிரான குற்றப்பிரேரணையை எந்த முஸ்லிம் மஜ்லிஸ் உறுப்பினரும் கொண்டு வரலாம்
B. பிரேரணை பொதுக்கூட்டத்தில் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் பட்சத்தில் சம்மந்தபட்ட நிருவாக உறுப்பினர் பதவி இழப்பார் (பொதுக்கூட்டத்தில் முஸ்லிம் மஜ்லிஸ் உறுப்பினர்களின் பெரும்பான்மை சமூகமளித்தல் வேண்டும் 51% ற்கு மேற்பட்ட)
C. நிருவாக உறுப்பினர் ஒருவர் தகுந்த காரணமின்றி தொடர்ந்து 3 நிருவாக கூட்ட அமர்வில் பங்கேற்கவில்லையாயின் அவர் பதவி இழந்தவராக கருதப்படுவார்.
D. நிருவாக உறுப்பினர் ஒருவர் தானாக பதவி விலக வேண்டுமெனில் தனது கையொப்பமிடப்பட்ட இராஜினாமா கடிதத்தை பொதுச்செயலாளருக்கு ஒப்படைப்பதன் மூலம் பதவி விலகுவார். அவ்வாறு வெற்றிடமாகும் பதவியை குறித்த கல்வியாண்டின் மஜ்லிஸ் உறுப்பினர்களின் பிரேரணைக்கேட்ப நிருவாக சபையினால் பதவியில் அமர்தப்படும்

## Chapter 04

Act: 24: நிதிமற்றும் வங்கிக்கணக்கு ஏற்பாடுகள் சம்மந்தமாக இவ்வுறுப்புரை தெளிவுபடுத்துகின்றது.

A. சகல நிதி தொடர்பான விடயங்களும் அரச அல்லது தனியார் வங்கி ஒன்றுடன் தொடர்புபடுத்தல் வேண்டும்.
B. முஸ்லிம் மஜ்லிஸ் எந்தவொரு அரச மற்றும் தனியார் வங்கியிலிருந்தும் கடனுதவி(Loan) கொடுக்கல் வாங்கள் செய்ய அனுமதியற்ற ஒன்றாகும்.
C. வங்கிக்கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெறவேண்டுமாயின் தலைவர், செயலாளர், பொருளாலர் ஆகிய மூவரில் இருவர் கையொப்பமிட்டு பணத்தை மீளப்பெறமுடியும்.
D. பொருளாலர் ரூபா 10,000.00 ற்கு மேற்படாத தொகையை கையிருப்பில் வைத்துக்கொள்ளமுடியும்.
E. கால சூழ்நிலைகேற்ப முஸ்லிம் மஜ்லிஸ் அங்கத்தவர்களிடம் இருந்து குறிப்பிட்ட நிதி அறவிடப்படும் இதற்கு கனிஷ்ட பொருளாலர் பொறுப்பாக இருப்பார்.
F. கால சூழ்நிலைகேற்ப ஏதேனும் வங்கியில் கனகொன்றை தொடங்க முஸ்லிம் மஜ்லிஸ் அனுமதிபெற்றதொன்றாகும்.
G. ரூபா 30,000.00 ற்கு மேற்பட்ட செலவினங்களை ஏற்படுத்தும் திட்டங்கள் ஏதாயினும் இருப்பின் அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள பொதுக்கூட்டத்தின் அனுமதி பெறப்படல் கட்டாயமானதாகும்.

# Chapter 05

## Act: 25: கூட்டங்கள் அல்லது அமர்வுகள் தொடர்பானது

A.1.a சகல கூட்டங்களுக்கும் பெரும்பான்மை உறுப்பினர்கள் சமூகமளிதிருதல் வேண்டும்.

A.2 நிருவாக கூட்டங்கள்

a. சகல நிருவாக கூட்டங்களும் ஒரு வாரத்துக்கு முன் நிருவாக குழு உறுப்பினர்களுக்கு அறியப்படுத்தல் வேண்டும்.
b. இவ்வறிவித்தல் செயலாளர் மூலம் அறிவிக்கபடல் வேண்டும்.
c. முஸ்லிம் மஜ்லிஸ் கட்டடத்தொகுதியில் இடம்பெறுதல் சிறந்தது.
d. கால சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது கூட்டப்பட முடியும்.

A.3 பொதுக்கூட்டங்கள

a. ஒரு கல்வியாண்டில் கட்டாயம் இரு முறைக்கு குறையாததாக கூட்டப்படல் வேண்டும்.
b. பொதுக் கூட்டம் தொடர்பான விடயங்கள் ஒரு வாரத்துக்கு முன்னதாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.
c. முஸ்லிம் மஜ்லிஸ் கட்டடத்தொகுதியில் இடம்பெறுதல் சிறந்தது.

A.4 விசேட பொதுக்கூட்டங்கள்

a. விசேட பொதுக்கூட்டம் ஒன்றை கூட்டும் படி முஸ்லிம் மஜ்லிஸ் உறுப்பினர்கள் பெரும்பான்மையானோர் (51%) அங்கீகாரமிட்டு ஒரு பிரேரணை செயலாளரிடம் சமர்பிக்கப்படுமிடத்து விசேட பொதுக்கூட்டம் கூட்டப்படும்.
b. கால சூழ்நிலைக்கு ஏற்ப தலைவர் விரும்பினால் ஒரு விசேட பொதுக்கூட்டத்தை கூட்ட முடியும்.
c. விசேட பொதுக்கூட்டங்கள் ஒரு வாரத்துக்கு முன் உறுப்பினர்களுக்கு அறியப்படுத்தப்படல் வேண்டும்.

A.5 வருடாந்த பொதுக்கூட்டம்

a. வருடாந்த பொதுக்கூட்டம் இரு வாரங்களுக்கு முன் மஜ்லிஸ் உறுப்பினர்களுக்கு அறியப்படுத்தப்படல் வேண்டும்.
b. இவ்வருடாந்த பொதுக்கூட்டமானது கல்வியாண்டின் இறுதிப்பகுதியில் இடம்பெறுதல் வேண்டும்.
c. இதன் போது எதிர்கால நிருவாக சபை தெரிவும் இடம்பெறும்.
d. 50% ற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கட்டாயம் சமூகமளித்திருத்தல் வேண்டும்.
e. முஸ்லிம் மஜ்லிஸ் கட்டடத்தொகுதியில் இடம்பெறுதல் சிறந்தது.

Act: 25: யாப்புத்திருத்தம்

a. கால சூழ்நிலைக்கேற்ப யாப்பினை பகுதி, முற்றாக மாற்றியமைக்கும் உரிமை நிருவாக சபைக்கு உண்டு.
b. யாப்புத்திருத்தங்கள் அனைத்தும் முஸ்லிம் மஜ்லிஸ் உறுப்பினர்களின் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படல் வேண்டும்.
c. திருத்தங்கள் அனைத்தும் பிரதி செய்யப்பட்டு இணைக்கப்படல் வேண்டும்.

Note,

- நிருவாக தெரிவின் போது தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் நன்னடத்தை உள்ளவராகவும் ஏதேனும் தவறின் பேரில் விசாரணைக்கு உற்படுத்தப்படாதவராகவும் எதிர் கால சந்ததியினருக்கு முன் மாதிரியாக உள்ளவர்களை தெரிவு செய்தல் சிறந்தது.
- சபரகமுவ முஸ்லிம் மஜ்லிஸ் என்பது சபரகமுவ பல்கலைக்கழக பழைய முஸ்லிம் மாணவர்கள் பாடுபட்டு பெற்றுத்தந்த சொத்தாகும். அதனை பேணிப்பாதுகாப்பதென்பது ஒவ்வொரு சபரகமுவ முஸ்லிம் மாணவர் கடமை என்பதை உணர்ந்து அதற்காக உறுதிபூண்டு உழைப்போம் என்று சத்தியவாக்கேடுத்தல் ஒவ்வொரு சபரகமுவ முஸ்லிம் மாணவரது பொறுப்பாகும்.
- நிருவாக சபைக்கு உறுப்பினர்களை தெரிவு செய்யும் போது குறித்த பதவிக்குரிய நிருவாக உறுப்பினர் பல்கலைக்கழக வளாகத்தில் இருப்பவராக இருத்தல் சிறந்தது.
- இக்கோற்பாடுகளை முஸ்லிம் மஜ்லிஸ் அங்கத்தவர்கள் அனைவரும் பின்பற்றுவதுடன் முஸ்லிம் மஜ்லிஸ் அங்கத்தவர்கள் தவிர்ந்தவர்களிடம் கைமாறுதல் தடுக்கப்பட்டுள்ளது.

***